சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

முன்னிலை : திருமதி.A.பர்சாத் பேகம் பிஏ.எம்.எல்.,

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 30 -ம் நாள்,வியாழக்கிழமை.

**எச்.எம்.ஓ.பி.எண்.12/2026**

**(CNR.No.TNTT19 -000081 - 2026)**

க.மகாராஜா ... மனுதாரர்

/ எதிர் /

கோ.கௌரி சங்கரேஸ்வரி ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 03.07.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதி அவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும் மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது இந்து திருமணச் சட்டம் பிரிவுகள் 13(1)(1-i)(ia)(ib) ன் கீழ், 27.05.2022 ல் தேதியில் இராமானுஜம்புதூர் தீராத்திகுளம் பெருாள் கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடும்படிக்கும் செலவுத்தொகை

கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் -**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.05.2022 அன்று தூத்துக்குடி திருவைகுண்டம் தாலுகா, இராமானுஜம் புதூர் தீராத்தி குளம் பெருமாள் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. மனுதாரர் எதிர்மனுதாரரின் தூரத்து உறவு முறை ஆவார். எதிர்மனுதாரர் வீட்டின் சார்பில் மனுதாரருக்கு 10 பவுண் தங்க நகையும் சீர்வரிசையும் கொடுத்தனர். திருமணத்திற்கு பிறகு மனுதாரர் வீட்டில் உபய மனுதாரர்கள் கூட்டு குடும்பமாக 4 நாட்கள் மட்டுமே வாழ்ந்தனர். திருமணத்தன்றுஇரவு நடைபெறவேண்டிய சம்பிரதாய சடங்குகள் எதுவும் நடைபெறவில்லை. எதிர்மனுதாரர் முதல் நாள் மனுதாரரிடம் தனக்கு இந்த திருமணம் பிடிக்கவில்லை என்றும். கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்ததாகவும் கூறி தனியாக படுத்து உறங்கிவிட்டார். நாளாக நாளாக சரியாகிவிடும் என மனுதாரர் நினைத்தார். ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரரை பிடிக்கவில்லை என்றும் சேர்ந்து வாழ முடியாது என்றும் கூறிவிட்டு எதிர்மனுதாரர் 4 நாட்களில் மனுதாரரை அழைத்துக்கொண்டு ஊருக்கு சென்றுவிட்டார். மனுதாரரும் புதிய இடம் என்பதால் இவ்வாறு சொல்கிறார் என நினைத்து எதிர்மனுதாரரை அவரது வீட்டில் கொண்டு விட்டு மனுதாரரும் அங்கு தங்கினார். அங்கேயும் எதிர்மனுதாரர் தாம்பத்தியத்தை தவிர்த்து மனுதாரரிடம் இருந்து விலகிஇருந்தார். மனுதாரரும் சின்ன வயதுதானே என நினைத்து பாசமாக இருந்தார். ஆனாலும் எதிர்மனுதாரர் மனுதாரரை புதிதாக திருமணமான கணவர் என்று பாராமல் மரியாதை

இல்லாமலும் அவதூறாகவும் பேசினார். மேலும் மனுதாரரின் பாசத்தை அலட்சியப்படுத்தி என்ன படுக்க அலைகிறாய் என்று ஆபாசமாக பலர் முன்னிலையில் கேட்டார். இதனால் வெட்கப்பட்டு அவமானப்பட்ட மனுதாரர் ஊருக்கு வந்துவிட்டார். சில வாரங்கள் கழித்து மனைவி மீது பாசத்துடன் ஊருக்கு சென்று பார்த்து மனுதாரர் எதிர்மனுதாரரை ஊருக்கு அழைத்தபோது உங்கள் தம்பி என்னை தவறாக பார்க்கிறார் என தவறாக வீண் பழி போட்டார். திருமணம் முடிந்தபின் நாம் சேர்ந்து வாழத்தான் வேண்டும் அங்கு சென்று நாம் வாழ பிடிக்கவில்லை என்றால் தனிக்குடித்தனம் போகலாமா என மனுதாரர் எதிர்மனுதாரரிடம் கேட்டபோது எதிர்மனுதாரர் என் கூட படுக்கவேண்டும் அதற்குத்தானே அலைகிறாய் இதற்கு நீ எவகூட வேண்டுமானாலும் போ உன் அக்கா தங்கை கூட போ என மனுதாரரின் பாசத்தை புரிந்துகொள்ளாமல் ஆபாசமாக அவமானமாக பலர் முன்னிலையில் மீண்டும் பேசினார். திருமணம் முடிந்து ஒரு மாதங்களில் எதிர்மனுதாரரின் இத்தகைய பேச்சு மனுதாரரை அதிர்ச்சி அடைய செய்து. 2023 ஜனவரி மாதம் மனுதாரரின்தாய் தந்தை ஆகியோரிடம் புகார் கூறி பொங்கல் நாளை முன்னிட்டு வீட்டில் பொங்கல் விட எதிர்மனுதாரரை அழைத்து வர சென்றார்- அப்போது எதிர்மனுதாரர் மனுதாரரின் தாயாரை அடிக்க கைஓங்கியும், எதிர்மனுதாரரை தண்ட சோறு என்றும் கெட்ட வார்த்தையால் மனுதாரரின் பெற்றோர்களிடம் கூறினார். என்னை கட்டாயப்படுத்தி மனுதாரருடன் சேர்ந்துவாழ அழைத்தால் அனைவரையும் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். மேலும் வீட்டை விட்டு வெளியே அனுப்பியுள்ளார அவமானப்படுத்தினார். 2023ம்

ஆண்டுக்கு பிறகு மனுதாரர் எதிர்மனுதாரரிடம் பேச முயன்றபோது செல்போனில் எஸ்.எம்.எஸ் மூலமாகவும் வாய்ஸ் ரிக்கார்ட்மூலமாகவும் அவதூறான வார்த்தைகளால் பேசி திட்டினார். இந்நிலையில் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன் இருந்தே வேறு ஒரு ஆணுடன் தொடர்பில் உள்ளதாகவும் அவரையே திருமணம் செய்துகொள்ளப்போவதாகவும் அதனால் தான் மனுதாரரை பிடிக்கவில்லை என்றும் உறவினர்களிடம் கூறினார். பின்னர் எதிர்மனுதாரர் மனுதாரரை பிரிந்து அவரையே திருமணம் செய்துகொண்டு குழந்தை பெற்றுக்கொண்டதாகவும் உசிலம்பட்டி காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்துவிட்டதாகவும் சமூக வளைதளங்களில் வளைகாப்பு நடந்த நிகழ்ச்சிக்கான புகைப்படங்களை பார்த்ததாகவும் இத்தகைய அருவெறுக்கத்தக்க செயல்களாலும், பேச்சுகளாலும் மனுதாரர் நரக வாழ்வை தினமும் அனுபவித்து வருவதாகவும் திருமணம் ஆகியும் தனியாக வாழ்ந்து வருகிறார். மனுதாரர் எதிர்மனுதாரரை 4 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். இனியும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வழியில்லை என்பதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3**. எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகவில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

**4**. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

5. தீர்வு காண வேண்டிய பிரச்சனை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டன.

7. மனு சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனு சங்கதிகளை அனுசரித்து அவரது முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.05.2022 ம் தேதியில் தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, இராமானுஜபுரம் பெருமாள் கோவிலில் வைத்து இந்து முறைப்படியும், சாதி சம்பிரதாய முறைப்படியும் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடந்ததாகவும் திருமணத்தை நிரூபிக்கும் வகைக்கு திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், உபய மனுதாரர்களின் திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட போட்டோ ம.சா.ஆ.2 ஆகவும், ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.3 ஆகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. உபய மனுதாரர்கள் இந்து முறைப்படி சட்டப்படி பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. திருமணத்திற்காக மனுதாரரின் பெற்றோர் மனுதாரருக்கு 10 பவுண் தங்க நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்களும் கொடுக்கப்பட்டதாகவும் திருமணத்தன்று முதல் நாள் இரவு தனக்கு திருமணம் செய்துகொள்ள பிடிக்கவில்லை என்றும் பெற்றோர்களின் கட்டாயத்தின் பேரில் திருமணம் செய்துகொண்டதாகவும் இதனால்

வழக்கம் போல் மனுதாரர் தனியாக படுத்து உறங்கியுள்ளதாகவும் நாட்கள் ஆக ஆக சரியாகிவிடும் என நினைத்ததாகவும் ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரரை பிடிக்கவில்லை என்று கூறி ஊருக்கு அழைத்துச்சென்றுவிட்டதாகவும் அங்கு வைத்து எதிர்மனுதாரர் மனுதாரரை அவதூறாக பேசியதாகவும் இதனால் மனுதாரர் வெட்கப்பட்டு அவமானப்பட்டு ஊருக்கு கிளம்பியதாகவும் ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

10. மேலும் மீண்டும் சேர்ந்து வாழ அழைத்தபோது மனுதாரரின் தம்பி தன்னை தவறாக பார்ப்பதாகவும் வீண் பழி போட்டதாகவும் அதற்கு மனுதாரர் தனிக்குடித்தனம் போகலாமா என கேட்டதாகவும் அதற்கு மனுதாரர் நீ எவ கூடவேனாலும் போ உன் அக்கா தங்கை கூட போ என பலர் முன்னிலையில் மீண்டும் எதிர்மனுதாரர் மனுதாரரை பேசியதாகவும் தனது தாயாருடன் சென்று அழைத்தபோது மனுதாரரின் தாயாரை அடிக்க கை ஓங்கியும் மனுதாரரை தண்டச்சோறு என்றும் கெட்ட வார்த்தைகளால் மனுதாரரின் பெற்றோரிடம் கூறியதாகவும் எதிர்மனுதாரர் செல்போனில் ஆபாசமாக திட்டி வாய்ஸ் ரிக்கார்ட் மூலமாகவும் அவதூறான வார்த்தைகளால் திட்டியதாகவும் ம.சா.1 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்.

11. மேலும் அவரது சாட்சியத்தில் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன் இருந்தே வேறு ஒரு ஆணுடன் தொடர்பில் உள்ளதாகவும் அவரையே திருமணம் செய்துகொள்ள போவதாகவும் அதனால் தான் மனுதாரரை பிடிக்கவில்லை என்றும் உறவினர்களிடம் கூறிவருவதாகவும் பின்னர் எதிர்மனுதாரர் மனுதாரரை பிரிந்து வீட்டை விட்டு வெளியேறி வேறு ஒரு ஆண் நபருடன் திருமணம்

செய்துகொண்டதாகவும் குழந்தை பெற்றுவிட்டதாகவும் உசிலம்பட்டி காவல் நிலையத்தில் காதலனுடன் தஞ்சம் அடைந்துவிட்டதாகவும் வளைகாப்பு நடந்த நிகழ்ச்சியை சமூக வளைதளங்களில் உள்ள படங்களை பார்த்து தெரிந்துகொண்டதாகவும் கடந்த 2023ம் ஆண்டு முதல் மனுதாரருக்கு கணவன் என்ற முறையில் எந்த பணிவிடைகளையும் செய்யாமல் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் ம..சா.1 சாட்சியமளித்துள்ளார்.

12. இந்த மனுவில் பேரிலான விசாரணைக்கு ஆஜராகும்படி எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு அனுப்பியும் ஆஜராகவில்லை. எதிர்மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுக்கவில்லை நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை செய்யவில்லை. மனு சங்கதிகள் உண்மை என்பதால் ஆட்சேபித்தும் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை ஆட்சேபித்தும் வழக்கு நடத்திட எதிர்மனுதாரர் முன் வரவில்லை எனவும் தீர்மானிக்கிறது. மனுதாரரின் சாட்சியம் வாயிலாக எதிர்மனுதாரருக்கு மனுதாரருடன் சேர்ந்து வாழும் எண்ணம் இல்லை என அறியமுடிகிறது.

13. மனுதாரரின் சாட்சியத்தின் வாயிலாக மனுதாரருடன் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல் மனுதாரரை மனதளவிலும் உடலளவிலும் கொடுமைகள் செய்துள்ளார் என்று துலங்குகிறது. எனவே மனு சங்கதிகளை மனுதாரர் உரிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் வாயிலாக நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. எனவே மனுதாரரும் எதிர்மனுதாரரும் இனியும் சேர்ந்து வாழ்வதற்கான

சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால் அவர்களுடைய திருமண வாழ்க்கை மீள முடியாத அளவிற்கு பிளவு பட்டு விட்டது என தீர்மானித்து மனுதாரர் கேட்டுள்ளவாறு விவாகரத்து பரிகாரம் வழங்குவது நீதிக்குகந்தது என முடிவு செய்து மனுதாரர் கேட்டுள்ள பரிகாரத்தை அவருக்கு வழங்கிட இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில், மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.05.2022 ம் தேதியில் இராமானுஜம்புதூர் தீராத்திகுளம் பெருமாள் கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்து, 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

BARSAD BEGUM A — Digitally signed by BARSAD BEGUM A Date: 2026.07.30 16:38:56 +0530

.

சார்பு நீதிபதி

திருவைகுண்டம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>** -

மசா.1 திரு. மகாராஜா

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** -

| | | |
|---|---|---|
| மசாஆ.1 | 27.05.2022 | திருமண அழைப்பிதழ் |
| ம.சா.ஆ-2 | | புகைப்படம் குறுந்தகடு |
| மசாஆ.3 | | ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ-4 | 15.05.2025 | ஸ்ரீவைகுண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் மனு ஏற்பு ரசீது |
| ம.சா.ஆ.5 | | எதிர்மனுதாரர் சமூக வளைதளத்தில் பதிவிட்டுள்ள புகைப்படம் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.07.30 16:39:05 +0530

சார்பு நீதிபதி,

திருவைகுண்டம்.

சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்

எச்.எம்.ஓ.பி.எண்.12/2026

நேரிய/வரைவு உத்தரவு

நாள்: 30.07. 2026